தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆடிப்பட்ட தக்காளி விலை முன்னறிவிப்பு

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் (NHB) தகவல் படி, 2015-16 ஆம் ஆண்டில் தக்காளி 7.54 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 18.16 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. மாறாக கடந்த ஆண்டில் தக்காளி 7.67 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 16.38 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில், மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், மேற்கு வங்க ளம், ஒடிசா, பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் பரப்பளவு சமநிலையில் இருப்பினும் முக்கிய உற்பத்தியாளரான கர்நாடக மாநிலத்தின் தக்காளி பரப்பளவு கணிசமாக சரிந்துள்ளது.

பொதுவாக, கோடை மாதங்களில் வெப்பமான வானிலை மற்றும் வறட்சி காரணமாக தக்காளியின் உற்பத்தி குறைந்து காணப்படும். இந்த ஆண்டு நீடித்த கோடைகாலம், வெப்ப அழுத்தம், காலம் தவறி பெய்த மழை, மேலும் விதையின் குறைந்த முளைப்பு திறன் ஆகிய காரணங்களினால் தக்காளியில் விலை உயர்ந்துள்ளது. நல்ல தரமான தக்காளி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மட்டுமே கிலோவிற்கு ரூ. 40-50/- பண்ணை விலை கிடைத்துள்ளது. உபரி விளைபொருள் சராசரி விலையில் சந்தைப்படுத்தப்பட்டது. ஆனால், தக்காளி விலை மொத்தம் மற்றும் சில்லறை வியாபாரத்தில் பல மடங்காக உள்ளது. எனினும் அது ஒரு குறுகிய கால நிகழ்வு ஆகும். வழக்கமான சூழ்நிலைகளில் அறுவடை செய்யப்பட்ட நல்ல தரமான தக்காளியின் உற்பத்தி சதவீதம் தற்போதைய சூழலை காட்டிலும் மொத்த உற்பத்தியில் அதிகமாகவே காணப்படும். இந்நிலையில், தக்காளியின் விலை உயர்வு மாநிலம் மற்றும் நாட்டின் தக்காளி உற்பத்தியாளர்களுக்கோ அல்லது நுகர்வோர்களுக்கோ ஒரு பயனும் அளிக்கவில்லை.

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் (NHB) தகவல் படி, தமிழ்நாட்டில் 2015-16 ஆம் ஆண்டில் தக்காளி 0.24 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 3.05 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. மாறாக கடந்த ஆண்டில் தக்காளி 0.25 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 3.28 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, கோவை, திருச்சி, மதுரை , திண்டுக்கல் மற்றும் ஈரோடு ஆகியவை தக்காளி உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்கள் ஆகும்.

நாட்டின் தக்காளி உற்பத்தி குறைபாட்டிற்கான காரணங்களாகிய வெப்ப அழுத்தம், பூ உதிர்தல், மேலும் நீடித்த கோடைகாலம் ஆகியவற்றால் மாநில அளவிலும் தக்காளி உற்பத்தி சற்று குறைந்து காணப்படுகின்றது. தற்போது தக்காளியின் வரத்து மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப்பிரதேசம் மாநிலங்களிருந்து தமிழ்நாட்டு சந்தைகளுக்கு வருகின்றது. தென்மேற்கு பருவநிலை தொடக்கத்தினால் தக்காளியின் தேவை கேரளாவில் அதிகரித்துள்ளது, இதுவும் தக்காளியின் விலை உயர்விற்கு பங்களித்துள்ளது.

இந்நிலையில் விவசாயிகள் தக்காளி விலை நிலவரத்தை அறிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் உழவர்சந்தைகளில் கடந்த 12 ஆண்டுகளாக நிலவிய தக்காளி விலை விவரங்களின் மூலம் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், தக்காளியின் பண்ணை விலை அறுவடை மாதத்தில் (ஆகஸ்ட- 2016) கிலோவிற்கு ரூ.35/- ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட தக்காளி விலை முன்னறிவிப்பின் படி இந்த பருவநிலைக்கு ஏற்றவாறு தக்க நடவு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405.

<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசிஎண் - 0422-6611374, 0422-6611283.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்